# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் செய்தி மடல்

செய்தி 19 மடல் 9 செப்டம்பர் 2019 ₹1.00

## 73ஆவது சுதந்திர தின விழா





நமது நாட்டின் 73ஆவது சுதந்திர தினம், பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவுகளில் 15.08.2019 அன்று கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பல்கலைக்கழகத் தலைமை நிலைய வளாகத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து, 25ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றிய பல்கலைக்கழகப் பணியாளர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி உரையாற்றினார். விழாவில் பல்கலைக்கழகப் பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முன்னதாகத் துணைவேந்தர் அவர்கள் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து உரை நிகழ்த்தினார். நாமக்கல், திருநெல்வேலி மற்றும் ஒரத்தநாட்டில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர்களும், கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வரும், ஒசூர் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி முதல்வரும் தத்தம் கல்லூரி வளாகத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்தனர். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தேசிய மாணவர் படையினரின் அணிவகுப்பு நடைபெற்றது.

## கால்நடை மரபணுத் திருத்தம் குறித்த பன்னாட்டுக் கருத்தரங்கம்




சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை இனப்பெருக்கவியல் மற்றும் ஈனியல் துறை, அமெரிக்காவின் வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகம் ஆகியவை சார்பில் “கால்நடை மரபணுத் திருத்தம்” குறித்த பன்னாட்டு கருத்தரங்கம் 07.08.2019அன்று நடைபெற்றது. தமிழக அரசின் கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறையின் முதன்மைச் செயலர் மருத்துவர் கே.கோபால் இ.ஆ.ப. அவர்கள் கருத்தரங்கைத் துவக்கிவைத்துக் கருத்தரங்க மலர் வெளியிட்டார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி.பாலச்சந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் பிரயன் கே சிலிங்கர், பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல்

இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கருத்தரங்கின் அமைப்புச் செயலாளர் மற்றும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை இனப்பெருக்கவியல் மற்றும் ஈனியல் துறைப் பேராசிரியர் முனைவர் செசிலியா ஜோசப் அவர்கள் நன்றி கூறினார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் பல்வேறு நிலையங்கள், மாநில வேளாண்மை / கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகங்கள், மாநிலக் கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறைகள் இவற்றைச் சார்ந்த 124 பேர் கருத்தரங்கில் பங்கேற்றனர். கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி. தினகர்ராஜ், ஐதராபாத் உயிரணு மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தின் முதன்மை அறிவியலாளர் முனைவர் கே. தங்கராஜ், தேசியக் கால்நடை உயிர்த் தொழில்நுட்ப நிலைய இயக்குநர் முனைவர் சுபீர் எஸ். மஜூம்தார், வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகத்தின் இனப்பெருக்க உயிரியல் மைய இயக்குநர் முனைவர் ஜோன் எம். ஓயட்லே, உட்டா மாகாணப் பல்கலைக்கழகத்தின் கால்நடை, பால் வளம் மற்றும் கால்நடை அறிவியல் துறைப் பேராசிரியர் முனைவர் இரினா போலேஜாவா, இங்கிலாந்தின் ரோஸ்லின் நிலையத்தின் கால்நடை உயிர்த் தொழில்நுட்பப் பேராசிரியர் மற்றும் ரோஸ்லின் புதிதறி மையத் தலைவர் முனைவர் புருஸ் ஒயிட்லா ஆகியோர் விரிவுரை வழங்கினர்.

## 11ஆவது சிகிச்சை நிகழ்வுக் கருத்தரங்கம்



பல்கலைக்கழகச் சிகிச்சையியல் இயக்குநரகம்மூலம் “பல்கலைக்கழக மாணவர்களுக்காகப் பண்ணை மற்றும் உடன்விலங்கு மருத்துவம்” குறித்த 11ஆவது சிகிச்சை நிகழ்வுக் கருத்தரங்கம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 29.08.2019முதல் 31.08.2019வரை நடைபெற்றது. முதுநிலைப் பட்டம் பயிலும் மாணவர்களுக்கென்றே “கால்நடை மருத்துவத்தில் சிகிச்சையில் முன்னேற்றங்கள்” குறித்த ஒரு நாள் நிகழ்ச்சி 29.08.2019அன்று நடத்தப்பட்டது. இதில் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த 36 முதுநிலைப் பட்ட மாணவர்கள் பங்கேற்றனர். சிகிச்சை மருத்துவ ஆய்வுகளை முதன்மைப்படுத்தி 30.08.2019, 31.08.2019 ஆகிய இரு நாட்கள் நடைபெற்ற சிகிச்சை நிகழ்வுக் கருத்தரங்கில் நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் சார்ந்த இளநிலைப் பட்ட மாணவர்கள், முதுநிலைப் பட்ட மாணவர்கள் மற்றும் பயிற்சி மேற்கொள்ளும் மாணவர்கள் ஆகியோர் பங்கேற்றனர். நமது நாட்டின் ஒன்பது மாநிலங்களைச் சார்ந்த மொத்தம் 467 மாணவர்கள், அமெரிக்க வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகத்தின் இரு முதுநிலைப் பட்ட மாணவர்கள் ஆகியோர் சிகிச்சை நிகழ்வு குறித்த கட்டுரை அளித்தனர். கருத்தரங்கில் இன்டாஸ் மருந்து நிறுவனத்தின் இன்டாஸ் சிறந்த கல்வி நிலைய விருது மற்றும் சுழற்கோப்பை சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்பட்டது. இளநிலைப் பட்ட மாணவர்களுக்கான தனுவாஸ் துணைவேந்தர் கோப்பை ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திற்கும், முதுநிலைப் பட்ட மாணவர்களுக்கான தனுவாஸ் துணைவேந்தர் கோப்பை பிடார், கர்நாடகக் கால்நடை மருத்துவம் மற்றும் மீன்வள அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் வழங்கப்பட்டன. கருத்தரங்கின் நிறைவு விழாவில் தமிழ்நாடு டாக்டர் எம்ஜிஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேர் முனைவர் சுதாசேஷையன் அவர்கள் பங்கேற்று, கருத்தரங்க மலர் வெளியிட்டுப் பரிசுகள் வழங்கித் தலைமையுரை ஆற்றினார். மத்திய அரசின் முன்னாள் கால்நடைப் பராமரிப்பு ஆணையர் மற்றும் கர்நாடகக் கால்நடை மருத்துவம் மற்றும் மீன்வள அறிவியல் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் சுரேஷ் எஸ். ஹோனப்பகோல் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பல்கலைக்கழகச் சிகிச்சை நிகழ்வுப் பயண நிதி, தனுவாஸ் துணைவேந்தர் கோப்பை ஆகியவை வழங்கிச் சிறப்புரை ஆற்றினார். சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் நன்றி கூறினார்.

## கோழியின உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி பற்றிய தேசியப் பயிலரங்கம்



ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரிமூலம் “கோழியின உற்பத்தியில் முட்டை மற்றும் இறைச்சி ஏற்றுமதியை அதிகப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் மற்றும் வாய்ப்புகள்” என்ற பயிலரங்கு 22.08.2019அன்று நடைபெற்றது. பயிலரங்கைக் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மருத்துவர் எஸ். பிரபாகர் இ.ஆ.ப. அவர்கள் துவக்கிவைத்தார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பயிலரங்க மலரை வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் கு. மணி அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கல்லூரிப் பேராசிரியர் முனைவர் பெ. சம்சுதீன் அவர்கள் நன்றி கூறினார். கோழி ஏற்றுமதியில் சிறந்து விளங்குகின்ற அரசு மற்றும் தனியார் நிறுவனத் தொழில்நுட்ப வல்லுநர்கள் பலர் பயிலரங்கில் கலந்துகொண்டு உரையாற்றினர். பயிலரங்கில் ஏற்றுமதிப் பண்ணையாளர்கள் மற்றும் அலுவலர்கள்

இடையேயான கலந்துரையாடலும் நடைபெற்றது. பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த 100 கோழிப் பண்ணையாளர்கள், தொழில்முனைவோர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

### ரோபாடிக்ஸ் சார்ந்த கற்றல் முறைகள்

'தனுவாஸ் கல்வி நிலைய மேம்பாட்டுத் திட்டம்' குறித்த இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் உயர்கல்வித் திட்ட நிதியுதவியுடன் "ரோபாடிக்ஸ் சார்ந்த கற்றல் முறைகள்" என்ற பயிலரங்கு, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 29.07.2019 முதல் 31.07.2019 வரையிலும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 01.08.2019 முதல் 03.08.2019 வரையிலும் நடத்தப்பட்டது. தேசிய வேளாண் உயர்கல்வித் திட்டத் தேசிய இயக்குநர் முனைவர் ஆர்.சி. அகர்வால் அவர்கள் துவக்கவுரை ஆற்றினார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். தேசிய வேளாண் உயர்கல்வித் திட்டத் தேசிய ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி. இராமசுந்தரம், அமெரிக்க வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகத்தின் சிகிச்சைத் தொடர்புத் திட்டம் மற்றும் சிகிச்சை உருவகப்படுத்தல் மைய இயக்குநர் முனைவர் ஜூலி அன் கேரி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பயிலரங்கில் மொத்தம் 60 பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

### தேசியப் பயிற்சி



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறையில் செயல்பட்டு வரும் மேம்பட்ட ஆசிரியர் பயிற்சி மையம்மூலம் "பண்ணை மற்றும் செல்லப்பிராணிகளில் நோய் கண்டறிதலில் மேம்பாடுகள் மற்றும் சுகாதாரப் பராமரிப்பில் சிகிச்சை நெறிமுறைகள்" குறித்த 21 நாள் தேசியப் பயிற்சி 01.08.2019 முதல் 21.08.2019 வரை நடைபெற்றது. பயிற்சியில் மகாராஷ்டிரம், உத்திர பிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத், பஞ்சாப், கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த 23 பேர் பங்கேற்றனர். பயிற்சி நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கித் தலைமையுரை ஆற்றினார். இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் (கால்நடை நலம்) முதன்மை அறிவியலாளர் முனைவர் (திருமதி) ஜோதி மிஸ்ரி அவர்கள் "குதிரைகளில் மூச்சுக்குழலுக்குள் குழாய் செருகுதல் நுட்பம்" குறித்த எண்ணியல் கையேடு வெளியிட்டார். மேம்பட்ட ஆசிரியர் பயிற்சி மைய இயக்குநர் மற்றும் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம்.ஜி. ஜெயதங்கராஜ் அவர்கள் பயிற்சி அறிக்கை அளித்தார். சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்களும் நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

### புதிய கல்வித் தொழில்நுட்பப் பயிலரங்கு



'தனுவாஸ் கல்வி நிலைய மேம்பாட்டுத் திட்டம்' குறித்த இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் உயர்கல்வித் திட்ட நிதியுதவியுடன் "புதிய கல்வித் தொழில்நுட்பம்" குறித்த பயிலரங்கு, சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 19.08.2019 முதல் 21.08.2019 வரையிலும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 22.08.2019 முதல் 24.08.2019 வரையிலும் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பயிலரங்கைத் துவக்கிவைத்தார். மேலும், தனுவாஸ் இணைநிலைப் பேராசிரியராகிய வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் முனைவர் இராமநாதன் காசிமாணிக்கம், பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் ஆகியோர் பயிலரங்கில் பங்கேற்றனர். வாஷிங்டன் மாகாணப் பல்கலைக்கழகக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருத்துவக் கல்வியின் இணைப் பேராசிரியர் முனைவர் சூசன் எம். மேத்யு அவர்கள் பயிலரங்கை நெறிப்படுத்தினார். ஒரு கல்லூரியில் இருந்து 30 பேராசிரியர்கள் என, இரு கல்லூரிகளிலும் நடைபெற்ற பயிலரங்கில் மொத்தம் 60 பேர் பங்கேற்றனர்.

### கால்நடை மருத்துவர்களுக்குப் பயிற்சி

- பல்கலைக்கழக விலங்குவழிப் பரவும் நோய்கள் ஆய்வகம் மூலம் "உணவுப் பாதுகாப்பு மற்றும் உற்பத்தித்திறனை அதிகப்படுத்தக் கால்நடை மற்றும் பொதுமக்களுக்கு ஒரே சுகாதார அணுகுமுறை" குறித்த மாநிலத் திட்டக் குழுவின் நிதியுதவி பெற்ற தமிழ்நாடு புதுமைத் திட்டத்தின்கீழ் அடைப்பான் நுண்ணுயிரியை முன்கூட்டியே கண்டறிதலுக்கான "ஸ்டெயின் டிடக்ட் – பிஎ" கருவியின் பயன்பாடு குறித்த பயிற்சி, திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 26.08.2019அன்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் பங்கேற்ற பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்து, நோய் கண்டறி கருவிகளை வழங்கித் துவக்கவுரை ஆற்றினார். கால்நடை நலக் கல்வி மைய இயக்குநர் முனைவர் ஜி. தினகர்ராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர்

ஜெ. ஜாண்சன் ராஜேஸ்வர் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். விலங்குவழிப் பரவும் நோய்கள் ஆய்வகப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஜி. ரவிகுமார் அவர்கள் நன்றி கூறினார். கால்நடைப் பராமரிப்பு




மற்றும் மருத்துவச் சேவைகள் துறையின் கால்நடை நோயறி பிரிவுகளில் பணியாற்றும் 15 கால்நடை மருத்துவர்கள் பயிற்சி பெற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவில் கால்நடைப் பராமரிப்பு மற்றும் மருத்துவச் சேவைகள் துறையின் முதன்மை நோய்நிகழ்வியல் அலுவலர் மருத்துவர் பி. சங்கரகுமார் அவர்கள் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள மையச் சிகிச்சையியல் ஆய்வகம்மூலம் “சிகிச்சையியல் ஆய்வகத் தொழில்நுட்பங்கள்” என்ற பயிற்சி, தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறையில் பணியாற்றும் 15 கால்நடை மருத்துவர்களுக்கு 19.08.2019 முதல் 21.08.2019 வரை வழங்கப்பட்டது. பயிற்சியின் நிறைவு விழாவில் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி.பாலசுப்பிரமணியன் அவர்கள் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

- திருச்சிராப்பள்ளி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் “குறைந்த விலையில் மண்ணில்லாப் பசுந்தீவன உற்பத்தி” குறித்த பயிற்சி, திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டத்தில் பணியாற்றும் 15 கால்நடை மருத்துவர்கள் மற்றும் 14 கால்நடை ஆய்வாளர்களுக்காக 19.08.2019 அன்று நடத்தப்பட்டது. திருச்சிராப்பள்ளி, கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் எஸ்.எஸ்தர் ஷிலா அவர்கள் பயிற்சியின் துவக்க நிகழ்ச்சியில் தலைமை வகித்தார். கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தியின் உதவி இயக்குநர் மருத்துவர் சுவாமிநாதன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

### பண்ணையாளர் பயிற்சி

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் பட்டியல் வகுப்பினர் சார்புத் திட்டத்தின்கீழ் விழிப்புணர்வு மற்றும் பண்ணை இடுபொருள்கள் வழங்கும் நிகழ்ச்சி 10.08.2019அன்று நடைபெற்றது. நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள், கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ஜெ. ஜாண்சன் ராஜேஸ்வர்




அவர்கள் முன்னிலையில் இடுபொருள்கள் வழங்கினார். திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களைச் சார்ந்த 100 கால்நடை வளர்ப்போர் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை உணவியல் துறையில் தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்ப மன்ற நிதியுதவியுடன் “தமிழ்நாட்டில் செம்மறி மற்றும் வெள்ளாடுகள் வளர்க்கும் விவசாயிகளின் சமூக பொருளாதார உயர்விற்குப் பருவ கால மாற்றத்திற்கு உட்பட்ட தீவனம் அளித்தலில் முன்னேற்றங்கள்” குறித்த பயிற்சி 06.08.2019 முதல் 08.08.2019 வரை நடைபெற்றது. பயிற்சியில் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 27 விவசாயிகள் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் பயிற்சியைத் தொடங்கிவைத்தார்.

- காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம் மூலம் 10 தொழில்முனைவோர்க்காக "முயல் வளர்ப்பு" குறித்த பயிற்சி 29.08.2019அன்றும், 21 பண்ணையாளர்க்காக “ஜப்பானியக் காடை வளர்ப்பு” குறித்த செய்முறைப் பயிற்சி, 30.08.2019அன்றும் நடத்தப்பட்டன.

- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் நபார்டு வங்கி நிதியுதவியில்



“நீடித்த நிலையான கால்நடை வளர்ப்பிற்கு மண்ணில்லாப் பசுந்தீவன உற்பத்தித் தொழில்நுட்பம்” பற்றிய திறன் மேம்பாட்டுப் பயிற்சியை, கரூர் மாவட்ட நபார்டு மன்ற உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகளுக்காக 06.08.2019

முதல் 08.08.2019 வரை நடத்தியது. 30 விவசாயிகள் பயிற்சி பெற்றனர்.

### ஊரக இளைஞர்களுக்குச் செயல்திறன் பயிற்சி

- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்; ஹைதராபாத், தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம்; குடுமியான்மலை, மாநில வேளாண் மேலாண்மை மற்றும் விரிவாக்கப் பயிற்சி நிலையம்; கரூர், வேளாண்மைத் துறை ஆகியவை இணைந்து, ஊரக இளைஞர்களுக்குக் "கோழி வளர்ப்பு மேலாண்மை" என்ற திறன் மேம்பாட்டுப் பயிற்சியை 26.08.2019 முதல் 03.09.2019 வரை நடத்தின. பயிற்சியில் 28 ஊரக இளைஞர்கள் பங்கேற்றனர். கரூர், ஆத்மா திட்ட இயக்குநர் மற்றும் வேளாண் இணை இயக்குநர் திருமதி கோ. வளர்மதி அவர்கள் பயிற்சியைத் தொடங்கிவைத்தார். கரூர், உழவர் பயிற்சி மையத்தின் வேளாண் துணை இயக்குநர் திருமதி ஆர். உமாராணி, வேளாண் துணை இயக்குநர் (மாநிலத் திட்டங்கள்) திரு. வெ. கந்தசாமி ஆகியோர் பயிற்சியில் பங்கேற்று, இளைஞர்களிடம் கலந்துரையாடினர்.

- திருச்சிராப்பள்ளி, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் மூலம் ஊரக இளைஞர்களுக்குக் "கறவை மாடு வளர்ப்பு" எனும்




செயல்திறன் பயிற்சி, 26.08.2019 முதல் 31.08.2019 வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் மொத்தம் 28 பயனாளிகள் பங்கேற்றனர். திருச்சிராப்பள்ளி, வேளாண் துறையின் மண்டல இணை இயக்குநர் திரு. இரா. சந்தானகிருஷ்ணன் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்துத் தலைமையுரை ஆற்றினார். திருச்சிராப்பள்ளி, உழவர் பயிற்சி மையத்தின் வேளாண் இணை இயக்குநர் திரு. டி. செல்வம், மத்திய அரசுத் திட்டங்களின் இணை இயக்குநர் திரு.ஜி. சரவணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

### உழவர் பயிலரங்கு

வேளாண் காடு குறித்த அனைத்திந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ் காட்டுப்பாக்கம், கால்நடை உணவியல் நிலையத்தில் பட்டியல் வகுப்பைச் சார்ந்த உழவர்களுக்காகக் "காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற ஒருங்கிணைந்த பண்ணைய முறைகள்" குறித்த பயிலரங்கு, 19.08.2019அன்று நடத்தப்பட்டது. பயிலரங்கைக் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர்(பொ.) முனைவர் ஆ.வே. ஓம்பிரகாஷ் அவர்கள் துவக்கிவைத்தார். பயிலரங்கில் மொத்தம் 41 உழவர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

### கால்நடை மருத்துவ முகாம்

கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், கரூர் மாவட்டக் கால்நடைப் பராமரிப்புத் துறையுடன் இணைந்து, பல்கலைக்கழகத்தின் கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தின்கீழ் கால்நடை மருத்துவ முகாமை 22.08.2019அன்று ஜல்லிப்பட்டியில் நடத்தியது. கரூர், கால்நடைப் பராமரிப்புத் துறையின் உதவி இயக்குநர் மருத்துவர் எஸ். மணிமாறன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். முகாமில் 105 கறவை மாடுகள், 570 வெள்ளாடு மற்றும் செம்மறியாடுகள் மற்றும் 110 நாட்டுக் கோழிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

### இலவச வெறிநோய்த் தடுப்பூசி முகாம்




திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைச் சிகிச்சை வளாகத்தில் "தமிழ்நாட்டின் நாட்டின நாய்களுக்குச் சுகாதாரப் பரிசோதனை மற்றும் இலவச வெறிநோய்த் தடுப்பூசி அளித்தல் முகாம்" 26.08.2019அன்று நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்து, "தமிழ்நாட்டின் நாட்டின நாய் வகைகள்" என்ற கையேடு வெளியிட்டு, தமிழ்நாட்டின் நாட்டின நாய் வளர்ப்பின் முக்கியத்துவம், நாய்களில் மைக்ரோ சிப்பின் நன்மைகள், இரத்த வகை அறியும் சோதனை, தடுப்பூசி அளித்தலின் முக்கியத்துவம் ஆகியவற்றை விளக்கியுரைத்தார். மேலும், சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன், கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் ஜெ. ஜான்சன் ராஜேஸ்வர், பல்கலைக்கழகத்தின் மருத்துவமனை மேலாண்மைக் குழு உறுப்பினர் திரு. பி. ரேமண்ட் பெட்ரிக் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மற்றும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த கால்நடை மருத்துவ வல்லுநர் குழு கால்நடைகளைப் பரிசோதித்து, இரத்தப் பகுப்பாய்வு, இதயத் துடிப்பலைப் பதிவு, மின் ஒலி இதய வரைவு மற்றும் புறவடிவப் பகுப்பாய்வைச் செயல்படுத்தியது. 100 நாட்டின நாய்களுக்குத் தனித்த அடையாள எண் கொண்ட நுண் சில்லு (மைக்ரோ சிப்) பொருத்தப்பட்டது. மொத்தம் 151 நாட்டின நாய்களுக்கு வெறிநோய்க்கு எதிராகத் தடுப்பூசி அளிக்கப்பட்டது.

## விழிப்புணர்வு முகாம்

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், நச்சுயிரித் தடுப்பூசி ஆராய்ச்சி மையமும் இணைந்து, திருநெல்வேலி மாவட்டம் இலட்சுமியம்மாள்புரத்தில் “ஆடுகளில் நீலநாக்கு நோய்க்கு எதிராகத் தடுப்பூசி” எனும் விழிப்புணர்வு முகாமை 12.08.2019 அன்று நடத்தின. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்து, மடிப்பிதழ் வெளியிட்டார். தடுப்பூசி ஆராய்ச்சி – நச்சுயிரித் தடுப்பூசிகள் மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஒய். கிருஷ்ணமோகன் ரெட்டி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். 2000 செம்மறியாடுகளுக்கு நீலநாக்கு நோய்க்கு எதிராகத் தடுப்பூசியும், 500 வெள்ளாடுகளுக்கு ஆட்டுக்கொல்லி நோய்க்கு எதிராகத் தடுப்பூசியும் அளிக்கப்பட்டன.

- கரூர், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமும் பல்கலைக்கழகத்தின் கால்நடை நலக் கல்வி மையமும் இணைந்து, நீலநாக்கு நோய் மற்றும் ஆட்டுக்கொல்லி நோய் பற்றிய விழிப்புணர்வு மற்றும் தடுப்பூசி முகாமைக் கரூர் மாவட்டம் மலைக்கோவிலூர் கிராமத்தில் 20.08.2019 அன்று நடத்தின. கரூர், கால்நடைப் பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர் கே. இராதாகிருஷ்ணன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்தார். முகாமில் 1500 செம்மறி மற்றும் வெள்ளாடுகளுக்குத் தடுப்பூசி அளிக்கப்பட்டது.

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை விரிவாக்கக் கல்வித் துறைமூலம் தமிழ்நாடு மாநில அறிவியல் தொழில்நுட்ப மன்றத்தின் புதுமைத் தொழில்நுட்பத்தைப் பரவலாக்குதல்



திட்டத்தின்கீழ் “நாட்டுக்கோழிகளில் வெள்ளைக்கழிச்சல் நோய்க்கு வாய்வழிக் குருணைத் தடுப்பு மருந்து” குறித்த விழிப்புணர்வு முகாம், திருநெல்வேலி மாவட்டம் சொக்கட்டான்தோப்பு, களக்குடி, குறிச்சிகுளம் மற்றும் எட்டாங்குளம் கிராமங்களில் முறையே 29.07.2019, 06.08.2019, 08.08.2019 மற்றும் 20.08.2019 ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. கல்லூரி முதல்வர்(பொ.) முனைவர் ஜெ. ஜான்சன் ராஜேஸ்வர் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்து, திட்ட மடிப்பிதழ் வெளியிட்டார். முகாமில் 100 நாட்டுக்கோழிப் பண்ணையாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## களநிலைச் செயல்விளக்க முகாம்

பல்கலைக்கழகத்தின் கால்நடை மருத்துவ ஆய்வின் பயன்பாடுசார் பரிமாற்றத்தளம்மூலம் “அதிர்வலைத் தொழில்நுட்ப அடிப்படையில் செயற்கைமுறைக் கருவூட்டல் கருவி” குறித்த களநிலைச் செயல்விளக்க முகாம், 09.08.2019 அன்று திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிபூண்டி கால்நடை மருத்துவமனையில் நடத்தப்பட்டது. இந்தச் செயற்கைமுறைக் கருவூட்டல் கருவியை உருவாக்கி, வடிவமைத்த இந்திய அறிவியல் நிலையத்தின் அணுசார் இனப்பெருக்க மேம்பாடு மற்றும் மரபியல் துறைப் பேராசிரியர் முனைவர் ஆர்.எம். மேதமூர்த்தி, பெங்களூரு, பசுப்ரதாம் கால்நடைத் தீவன நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலர் மருத்துவர் ஜெ. பார்கவா ஆகியோர் இந்தச் செயற்கைமுறைக் கருவூட்டல் கருவிச் செயல்படும் முறையைத் திருவள்ளூர் மாவட்டத்தின் 27 கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் 30 விவசாயிகளுக்கு செய்து காண்பித்தனர்.

## வேளாண் அறிவு மேலாண்மைக் கருவிகள் பற்றிய உணர்திறன் பயிலரங்கு




பல்கலைக்கழக நூலகம்மூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் தேசிய வேளாண் உயர் கல்வித் திட்ட நிதியுதவியுடன் பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர் நலன் கருதி “வேளாண் அறிவு மேலாண்மைக் கருவிகள்” பற்றிய உணர்திறன் பயிலரங்கு, ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 16.08.2019 அன்றும், திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 21.08.2019 அன்றும் நடத்தப்பட்டது. திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் மற்றும் பல்கலைக்கழக நூலகர்(பொ.) முனைவர் ஜி. ரத்தினசபாபதி, பெங்களூரு இன்ஃபர்மேட்டிக்ஸ் குளோபல் நிறுவனத்தின் திரு.வி.எஸ்.ரவிசங்கர், பெங்களூரு க்ளாரிவேட்டிவ் அனாலி ஸிஸ் நிறுவனத்தின் திரு.எஸ்.ஜஸ்வந்த் ஆகியோர் பயிலரங்கின் வல்லுநர்களாகச் செயல்பட்டனர்.

## கேரளாவிற்கு நிவாரண உதவி

கேரளா மாநிலத்தில் ஏற்பட்ட அதிதீவிர இயற்கைப் பேரிடரிலிருந்து கால்நடைகளைக் காக்கும் பொருட்டு, பல்கலைக்கழகத்தின் இணைப்பு நிலையங்களான நாமக்கல் மற்றும் ஒரத்தநாட்டில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், காட்டுப்பாக்கம் மையத் தீவனத் தொழில்நுட்பப் பிரிவு, ஒசூர் கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி ஆகியவை சார்பில் 10 டன் மாட்டுத்

தீவனமும், 1 டன் தாதுப்புக் கலவையும் வழங்கப்பட்டன. கேரளாவின் மலப்புரம் மாவட்டம், உப்படா கால்நடைப்



பராமரிப்புத் துறையின் கால்நடை உதவி மருத்துவரிடம் 17.08.2019அன்று நிவாரணப் பொருட்கள் ஒப்படைக்கப்பட்டன.

### திறன் மேம்பாட்டுப் பயிற்சி

நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் சிறப்புக் கல்விப் பிரிவுமூலம் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக நிதியுதவியுடன் "முதுநிலைப் பட்ட ஆராய்ச்சிக்கான உயிர்த் தகவலியலின் பயன்பாடு" குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி, 46 முதுநிலைப் பட்ட மாணவர்களுக்காக 09.08.2019 மற்றும் 10.08.2019ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. பல்கலைக்கழகத் தேர்வாணையர் முனைவர் பி. குமாரசாமி, முன்னாள் பேராசிரியர் முனைவர் கா. குமணன், எஸ்ஆர்எம் அறிவியல் தொழில்நுட்ப நிலையத்தின் உயிர்த் தொழில்நுட்பத் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் பிரியா சுவாமிநாதன், கோடுவெளி உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் இணை நூலகர் முனைவர் பி.எல். சுஜாதா ஆகியோர் உயிர்த் தகவலியலின் பல்வேறு பிரிவுகள் மற்றும் ஆராய்ச்சியில் அதன் பயன்பாடு பற்றிய செய்முறைப் பயிற்சி அளித்தனர்.

### தமிழ் மன்றத் துவக்க விழா

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 28.08.2019அன்று தமிழ் மன்றத் துவக்க விழா நடைபெற்றது. கவிமாமணி முனைவர் தி.மு. அப்துல் காதர் அவர்கள் தமிழ் மன்றத்தைத் துவக்கிவைத்து, 'தமிழ்த்தென்றல்' எனும் மாணவர் இதழின் முதல் பிரதியை வெளியிட்டுச் சிறப்புரை நிகழ்த்தினார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துத் தலைமையுரை ஆற்றினார். தமிழ் மன்றத் தலைவரும் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வருமான முனைவர் ஜெ. ஜான் கிருபாகரன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தமிழ் மன்ற ஆலோசகரும் கால்நடை விரிவாக்கக் கல்வித் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவருமான முனைவர் பெ. மதியழகன் அவர்கள் தமிழ் மன்ற வரலாற்றை விளக்கிக்கூறினார். மேலும், முத்தமிழ் விழாவில் சிறந்து விளங்குகின்ற மாணவர்களுக்கு விருதுகள் வழங்குவதற்காக ரூபாய் 1.50 இலட்சத்திற்கான ஆவணத்தைக் கல்லூரி முதல்வரிடம் வழங்கினார். தமிழ் மன்றச் செயலர் செல்வன் சி. அலிமுதீன் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்த் தென்றல் இதழின் ஆசிரியர் செல்வி ரெ. சுபா நன்றி கூறினார்.

### துணைவேந்தர் பங்கேற்பு




பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள் ஐதராபாத், பி.வி. நரசிம்மராவ் தெலுங்கானா கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்தில் 17.08.2019அன்று நடைபெற்ற அதன் முதலாவது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தினார்.

### புதிய தேசிய மாணவர் படைப் பிரிவுத் துவக்கம்



தஞ்சாவூர் தேசிய மாணவர் படைப் பிரிவு, ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் புதிய தேசிய மாணவர் படைப் பிரிவு செயல்பட 09.08.2019அன்று அனுமதியளித்தது. இதன் காரணமாகத் தஞ்சாவூர் தேசிய மாணவர் படைப் பிரிவு அலுவலர்களால் புதிய தேசிய மாணவர் படைப் பிரிவுக்கு பி.வி.எஸ்சி மற்றும் ஏ.எச். பட்டப் படிப்பு பயிலும் 17 முதலாமாண்டு மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

### நாட்டுநலப் பணித் திட்டம்

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டுநலப் பணித் திட்டம் சார்பாக 20.08.2019அன்று "தொழுநோய் பற்றிய விழிப்புணர்வு முகாம்" நடத்தப்பட்டது. இதில் நாமக்கல் தலைமை மருத்துவமனையின் தொழுநோய்ப் பிரிவின்

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Date of publication : 25th and 26th of every month

பெறுநர்

Printed and Published by Dr. K.N. Selvakumar, Director of Distance Education, Tamil Nadu Veterinary and Animal Sciences University, Old No. 327/New No. 485, Anna Salai, Nandanam, Chennai – 600035 on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University, Printed at University Printing Press, Mathur Road, Madhavaram Milk Colony, Chennai – 600051. Editor: Dr. K.N. Selvakumar, Ph.D.

மருத்துவச் சேவைகளின் துணை இயக்குநர் மருத்துவர் அ. ஜெயந்தினி அவர்கள் தொழுநோய் பற்றிச் சிறப்புரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் பா. மோகன் அவர்கள் துவக்கவுரை ஆற்றினார். முகாமில் மொத்தம் 100 மாணவர்கள் பங்கேற்றனர்.

- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவும் பன்னாட்டு ரோட்டரி சங்கமும் இணைந்து "இரத்த தானம் செய்யுங்கள் எனும் மாபெரும் இரத்த தான நிகழ்ச்சியின்" ஒரு பகுதியாகக் கல்லூரி வளாகத்தில் "இரத்த தான முகாமை" 29.08.2019அன்று நடத்தின. முகாமில் கல்லூரியின் 24 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்று, இரத்த தானம் செய்தனர்.

### பணி ஓய்வு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை விரிவாக்கக் கல்வித் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பெ. மதியழகன் அவர்கள் 31.08.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 29.08.1959இல் பிறந்த இவர், 36 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.



சத்தியமங்கலம், காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையத்தின் இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் கே. சிவக்குமார் அவர்கள் 31.03.2019அன்று விருப்பப் பணி ஓய்வு பெற்றார். 07.06.1966இல் பிறந்த இவர், 30 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.




நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி முதல்வர் அலுவலகத்தின் மேலாளர் திரு. ஆர். சுதாகரன் அவர்கள் 31.05.2019அன்று விருப்பப் பணி ஓய்வு பெற்றார். 22.05.1962இல் பிறந்த இவர், 28 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருள்கள் தொழில்நுட்பத் (இறைச்சி அறிவியல்) துறையின் கண்காணிப்பாளர் திருமதி டி.எம். இளவரசி அவர்கள் 31.08.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 21.08.1961இல் பிறந்த இவர், 24 ஆண்டும் 09 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகப் பதிவாளர் அலுவலகத்தின் உடனாள் (முதுநிலை) திரு. வி. ஜெயசந்திரன் அவர்கள் 31.08.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 20.08.1959இல் பிறந்த இவர், 25 ஆண்டும் 10 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கல்விச் சிறப்புப் பிரிவின் உடனாள் திரு. ஜி. ஞானசேகரன் அவர்கள் 31.08.2019அன்று பணி ஓய்வு பெற்றார். 05.08.1961இல் பிறந்த இவர், 31 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.


## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சி. பாலசந்திரன், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் க.ந. செல்வக்குமார்
தொலைநிலைக் கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் தி.வ. மீனாம்பிகை
முனைவர் சி. மணிவண்ணன்
முனைவர் த. செந்தில்குமார்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் பா. மதுகேஸ்வரன்
முனைவர் ம. தங்கபாண்டியன்
மருத்துவர் கா.தீ. கவிதா